


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ மே. 10, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 215 ❖ ரூ.10

### டெல்டா மாவட்டத்துக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் ஒருவர் நியமிக்கப்பட வாய்ப்பு

# திக் திக்

## அமைச்சரவை மாற்றத்திற்கான தேவை இருக்கிறதா? முதல்வர் தான் தீர்மானிக்க வேண்டும்

## "அமைச்சரவை மாற்றங்களைப் பற்றி யாமறியோம் பராபரமே" : அமைச்சர் துரைமுருகன்


**சென்னை , மே.10-**

**"அமைச்சரவை மாற்றங்களைப் பற்றி யாமறியோம் பராபரமே" என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.**

தமிழக அமைச்சரவை மாற்றம் தொடர்பாக மூத்த அமைச்சர் துரைமுருகன் ஆளுநர் ஆர்.என்.ரவியை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியானது.

இது குறித்து, சென்னை கோட்டூர்புரத்தில் செய்தியாளர்களை சந்தித்த மூத்த அமைச்சரும், அவை முன்னவருமான துரைமுருகன், "ஆளுநர் மாளிகைக்குச் சென்றால் சொல்லிவிட்டுத்தான் செல்வேன். அமைச்சரவை மாற்றம் குறித்து எனக்குத் தெரியாது. அமைச்சரவை மாற்றங்களை பற்றி யாமறியோம் பராபரமே.

தனக்குக்கீழே பணி செய்வோரை மாற்றி புதிய அமைச்சர்களை நியமிக்க முதல்வருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அது நடக்குமா என்பது





உங்களுக்கு தெரிந்த அளவுதான் எனக்கும் தெரியும். அமைச்சரவை மாற்றத்திற்கான தேவை இருக்கிறதா என முதல்வர் தான் தீர்மானிக்க வேண்டும். எந்த அமைச்சரும் தங்களது பொறுப்பு மாற்றப்படுமா என பதற்றத்தில் இல்லை. நிதி அமைச்சர் பொறுப்பு கொடுத்தால் வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன். நான் துணை முதலமைச்சராக வந்தாலும் நல்லதுதான்.

(இன்று மே-9) நேற்று தலைமைச் செயலகம் சென்றுவந்த பிறகு முதல்வரை சந்திக்க தொடர்பு கொண்டேன். ஆனால் முதல்வருக்கு கால்வலி என்பதால் ஓய்வு எடுப்பதாகக் கூறினர்.

புதிய அமைச்சர்கள் பதவிஏற்பு விழா நடந்தால் கலந்துகொள்வேன். நான் 2 நாட்களாக சென்னையில் இல்லை. ஒருநாள் சென்னையில் இல்லாவிட்டாலும் பாதி உலகம் தெரியமால் போய்விடுகிறது. முதல்வருடன் நான் வெளிநாடு செல்லவில்லை." என்று கூறினார்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மாற்றப்பட்டு, அவருக்கு பதில் சங்கரன் கோவில் எம்எல்ஏ ராஜா அல்லது மானா மதுரை எம்எல்ஏ தமிழரசி நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. தமிழரசி ஏற்கெனவே இத்துறையின் அமைச்சராக இருந்தவர் என்பதால் அவருக்கு வாய்ப்பு அதிகம் என தெரிகிறது.

இதுதவிர, பால்வளத் துறை அமைச்சர் நாசரும் இந்தபட்டியலில் உள்ளார். பால் கொள்முதல், பால் விநியோகம் தொடர்பான சர்ச்சைகள் தொடரும் நிலையில், நாசர் அதை சரியாக கையாளவில்லை என்ற வருத்தம் முதல்வருக்கு உள்ளதால், அவரை மாற்றிவிட்டு மூத்த அமைச்சர் ஒருவருக்கு இத்துறை வழங்கப்படலாம் என கூறப்படுகிறது. இதுதவிர, டெல்டாமாவட்டத்துக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் கூடுதலாக தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் இருந்து தலா ஒருவர் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### புதுக்கோட்டையில் திமுக இரண்டாண்டு சாதனை விளக்க மலரினை வெளியிட்டு

## ரூ.90.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்



புதுக்கோட்டை, மே.10-

புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை ரூ.1000 வழங்குவதற்கான ஆணைகளை வழங்கும் விழா, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் “தமிழ்நாடு அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி” என்ற தலைப்பில் ஈராண்டு சாதனை விளக்க மலரினை வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நேற்று (09.05.2023) வழங்கினர்.

இவ்விழா மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு தலைமையில் நடைபெற்றது, மேலும் இவ்விழாவில் வேளாண்மைத்துறை 10 பயனாளிகளுக்கு ரூ.5.44 லட்சம் மதிப்பிலும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.11.05 லட்சம் மதிப்பிலும்,. மாற்றுத்திறனாளி நலத்துறை 5 பயனாளிகளுக்கு ரூ.5.27 லட்சம் மதிப்பிலும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 500 பயனாளிகளுக்கு ரூ.69 லட்சம் மதிப்பிலான மாதாந்திர நிதியுதவி ஆக மொத்தம் 520 பயனாளிகளுக்கு ரூ.90.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கினர்.

இவ்விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பான திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாவட்ட நிர்வாகம் சிறப்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் இதுபோன்ற ஏராளமான

சாதனைகளை விளக்கி வெளியிட்டுள்ளவதற்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சரின் ஏழை, எளிய பொதுமக்களின் முன்னேற்றத்தினை கருத்தில்கொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள், எனவே பொதுமக்களின் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்திவரும் இத்தகைய மக்கள்நலத் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இவ்விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளியோரின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்துக் கொண்டியிருக்கிறார், அவருடைய உழைப்பின் சாதனையாக இரண்டு ஆண்டுகளில் ஏராளமான திட்டங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே பொதுமக்களின் நலனுக்காக தமிழக அரசு செயல்படுத்திவரும் இத்தகைய மக்கள்நலத் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா ,முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன் ,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், மாவட்ட வழங்கல் அலுவலர் ஆர். கணேசன், வேளாண் இணை இயக்குநர் பெரியசாமி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ். உலகநாதன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

ஒரு முறை வந்தால்
அது கனவு.
இருமுறை வந்தால்
அது ஆசை.
பல முறை வந்தால்
அது இலட்சியம்.




# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் வளாக நேர்முகத்தேர்வு



புதுக்கோட்டை,மே.10-

புதுக்கோட்டை அருகேயுள்ள சத்தியமங்கலம் சுதர்சன் பொறியியல் கல்லூரியில் இறுதியாண்டு அனைத்துத்துறை மாணவ மாணவிகளுக்கான வேலைவாய்ப்பு வளாக நேர்முகத்தேர்வு வெவ்வேறு கட்டங்களாக நடைபெற்றது. இதில் ஆம்பிசாப்ட், கிளேசி ஒர்க், லிங்கா ஆர்க்கிடெக், அம்பிகா ஜெய் பில்டர்ஸ், ப்ரக்லெட், க்யூஎஸ்பைடர்ஸ், க்ரூட் சொல்யூசன்ஸ், அருண் இஞ்சினியரிங், சக்தி கியர்ஸ், எட்ரிக்கல்ஸ் இஞ்சினியரிங், டெல்பி டிவிஎஸ் போன்ற அனைத்து பொறியியல் துறை சார்ந்த நிறுவன மனிதவள அதிகாரிகள் கலந்து கொண்டு மாணவர்களை தேர்வு செய்தனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவ,மாணவிகளுக்கும் கல்லூரி முதல்வர் ஸ்ரீ.கே. சீனிவாசன் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்தார், நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் பணி நியமன ஆணை கடிதங்களை சுதர்சன் கல்வி குழுமத்தின் நிறுவனத் தலைவர் ஸ்ரீ. வி.கே.சுந்தரம், நிர்வாகி ஸ்ரீமதி இராஜீ சுந்தரம் மற்றும் தாளாளர் ஸ்ரீ. கே.விஜயகுமார் மற்றும் செயலாளர் ஸ்ரீ.கே.அஜய் குமார் ஆகியோர் வழங்கினர்.

பணி நியமன ஆணை வழங்கல் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கல்லூரி வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் சூ. ஜான் ஜோசப் செய்திருந்தார். நடப்பு கல்வியாண்டில் மட்டும் நடைபெற்ற நேர்முகத் தேர்வுகளில் சுதர்சன் பொறியியல் கல்லூரியில் படிக்கும் இறுதியாண்டு மாணவர்களுள் மொத்தம் 95 விழுக்காடு மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜமீன் சுத்தமல்லி வி. கைகாட்டியில் திமுக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்



அரியலூர், மே. 10-

ஜமீன் சுத்தமல்லி மற்றும் வி.கைகாட்டி ஆகிய ஊர்களில், திமுக அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

அரியலூர் மாவட்டம், தாபழூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில், ஜமீன் சுத்தமல்லி மாரியம்மன் கோவில் தெருவில் நடைபெற்றது, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின், இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்துக்கு, கட்சியின் ஒன்றிய செயலாளரும், தாபழூர் வட்டார வேளாண்மை திட்ட (அட்மா) தலைவருமான, வா.சௌந்தர்ராஜன் தலைமை வகித்தார்கள், முன்னாள் மாவட்ட பிரதிநிதி மு. அரியமுத்து வரவேற்று பேசினார்.

தலைமை திமுக பேச்சாளர் கு. மொழிமாறன் சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில், ஊராட்சி மன்றத் தலைவர் ஆறுமுகம், ஒன்றிய அவைத்தலைவர் ராஜேந்திரன், தலைமை திமுக பேச்சாளர் இளஞ்செழியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் பாண்டியன், தனவேல், மாவட்ட பிரதிநிதிகள் சாமிநாதன், ராஜேந்திரன், தேவேந்திரன், மற்றும் திமுக மாவட்ட, ஒன்றிய இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், கிளைத்திமுக செயலாளர்கள், பொதுமக்கள், உள்ளிட்ட பலர் பங்கேற்றார்கள். முடிவில் கிளை திமுக செயலாளர் ஜமீன் சுத்தமல்லி கருணாநிதிக்கு நன்றி கூறினார்.

அரியலூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில், வி.கைகாட்டி அண்ணா திடலில் நடைபெற்ற, திமுக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்துக்கு, கட்சியின் அரியலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் மா.அன்பழகன் தலைமை வகித்தார், ஒன்றிய அவைத்தலைவர் சண்முகம் வரவேற்றார்.

திமுக தலைமை பேச்சாளர் சபாபதி மோகன் சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில், திமுக மாவட்ட துணைச் செயலாளர் சந்திரசேகர், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கருப்பையா, பழனியாண்டி, பொருளாளர் நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் முருகேசன், ரங்கராசு, புல்லட் காசிநாதன், தொகுதி ஐடி விங் நிர்வாகி குப்புசாமி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பரமசிவம், அரசு வழக்கறிஞர் முத்தமிழ் செல்வன், திமுக நிர்வாகிகள் திருமுருகன், திலீபன், விஜயகுமார், சாமிநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் ரெட்டிபாளையம் கிளை செயலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.




### திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியம் சார்பில்

# திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்



கள்ளக்குறிச்சி, மே. 10-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத்தொகுதிக்கு உட்பட்ட, திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள திருமுண்டீச்சரம் கிராமத்தில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இப்பொதுக்கூட்டம் திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட குழு உறுப்பினருமான சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது, இக்கூட்டத்திற்கு தலைமை திமுக பேச்சாளர் ஆரணிமாலா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திராவிட மாடல் ஆட்சியின் இரண்டு ஆண்டு சாதனைகளை எடுத்துக் கூறி சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வின் போது பொதுக்குழு உறுப்பினர் துரைராஜ், மு.மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ரவி பிரபாகரன், மாவட்ட ஆதிதிராவிட துணை அமைப்பாளர் அய்யனார், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சுபாஷினி அய்யனார், ஒன்றிய அவைத்தலைவர் கலிவரதன், பொருளாளர் மைக்கேல், ஒன்றியக்குழு உறுப்பினர் தனக்கோடி ஸ்ரீதர், மற்றும் நிர்வாகிகள் ராஜேந்திரன், ராணி ராமச்சந்திரன், பிரியா மணிகண்டன், ஆறுமுகம், ஸ்ரீதர், சுப்பிரமணியன், வீராசாமி, பிரபாவதிதாமோதரன், சின்னப்பராஜ், ராஜேஷ்கண்ணா, இளம்வழுதி மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 'தி கேரளா ஸ்டோரி' படக்குழுவினர்களுக்கு மிரட்டல் மும்பை போலீஸ் பாதுகாப்பு




மும்பை, மே. 10-

தி கேரளா ஸ்டோரி படக் குழுவைச் சேர்ந்த ஒருவருக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் வந்ததை அடுத்து அவருக்கு மும்பை போலீசார் பாதுகாப்பு கொடுத்துள்ளார்கள்.

'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் கடந்த 5ம் தேதி வெளியானது. இந்த படம் இந்தி மொழியில் உருவாக்கப்பட்டுள்ளது. கேரளாவில் இந்து பெண்கள் இஸ்லாம் மதத்திற்கு மாற்றப்பட்டு, அவர்கள் ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத இயக்கத்தில் சேர்க்கப்படுவதாக கூறும் இப்படம் கலவையான விமர்சனத்தைப் பெற்றுள்ளது. இப்படம் கடந்த 4 நாட்களில் ரூ.11 கோடி வசூல் ஈட்டியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த படம் மேற்கு வங்கத்தில் தடை செய்யப்பட்டது. இப்படம் வெறுப்பையும் பரப்புகிறது என்றும், இதனை வெளியிடுவது சமூக அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தமிழ்நாட்டில் படம் வெளியான போதிலும், திரையரங்க உரிமையாளர்கள் சங்கம் எடுத்த முடிவின் காரணமாக படம் திரையில் வெளியிடுவது நிறுத்திக்கொள்ளப் பட்டுள்ளது. அதே நேரத்தில், இப்படத்திற்கு மத்தியப் பிரதேச மாநில அரசு வரி விலக்கு அளித்துள்ளது. அனைவரும் பார்க்க வேண்டிய படம் இது என அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இப்படக்குழுவைச் சேர்ந்த ஒருவருக்கு அடையாளம் தெரியாத தொலைபேசி எண்ணில் இருந்து மிரட்டல் செய்தி வந்துள்ளது. இது குறித்து படத்தின் இயக்குநரான சுதிப்தோ சென், போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். இதையடுத்து, போலீசார் சம்பந்தப்பட்ட நபருக்கு பாதுகாப்பு கொடுத்துள்ளனர். இதுவரை முறைப்படி புகார் கொடுக்காததால், இது குறித்து இன்னும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்தியப் பிரதேசம் பேருந்து கவிழ்ந்த விபத்தில் உயிரிழப்பு 22 ஆக அதிகரிப்பு



கார்கோன் , மே. 10-

மத்தியப் பிரதேசத்தில் ஆற்றுப் பாலத்தின் தடுப்பை உடைத்துக்கொண்டு பேருந்து கீழே விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

மத்திய பிரதேசத்தின் கர்கோன் மாவட்டத்தில் உள்ள தங்கார்கோன் கிராம ஆற்றுப் பாலத்தில் சென்ற தனியார் பேருந்து ஒன்று, நேற்று காலை 8.40 மணி அளவில் விபத்துக்குள்ளானது. 50 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பேருந்து, திடீரென ஆற்றுப் பாலத்தின் தடுப்புச் சுவரை உடைத்துக்கொண்டு கீழே விழுந்தது. சுமார் 50 அடி உயரத்தில் இருந்து பேருந்து கீழே விழுந்ததில், பேருந்தில் பயணம் செய்தவர்களில் 22 பேர் உயிரிழந்தனர். 31 பேர் காயமடைந்துள்ளனர். முன்னதாக, 15 பேர் உயிரிழந்ததாகவும், 25 பேர் காயமடைந்ததாகவும் கார்கோன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தரம்வீர் சிங் தெரிவித்திருந்தார். இந்த விபத்தில் பேருந்தின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் இருவரும் உயிரிழந்துவிட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

காயமடைந்தவர்கள் அனைவரும் கார்கோன் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதிக பயணிகளை ஏற்றிச் சென்றதுதான் விபத்துக்குக் காரணமா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் வழங்கப்படும் என மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு ரூ.50,000 மற்றும் லேசான காயம் அடைந்தவர்களுக்கு ரூ.25,000 வழங்கப்படும் எனவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

விபத்து மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தனது விருப்பத்தை வெளிப்படுத்தி உள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் தேசிய நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார். இந்நிலையில் உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்க கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.



ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி ஸ்ரீ நித்திய கல்யாண பெருமாள் வகையறா தேவஸ்தானத்தில் காலை 10.00 மணியளவில் உண்டியல் எண்ணும் பணி நடைபெற்றது. இப்பணியில் கோவில் நிர்வாக அதிகாரி கே.அருணகிரிநாதன், அறங்காவல் வாரியம் தலைவர் ஆர்.வெற்றிச்செல்வன், துணைத் தலைவர் சி.புகழேந்தி, செயலாளர் ஜி.பாஸ்கரன், பொருளாளர் வி.சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். மாலை 4.00 மணி அளவில் உண்டியல் எண்ணும் பணி நிறைவுற்றது. வசூல் தொகை ரூபாய் 8,35,770/ இருந்தது. இந்த பணம் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது.

### தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியம் சார்பில்

# திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்



தென்காசி, மே. 10-

தென்காசி மாவட்டம்-கடையநல்லூர் ஒன்றியம் சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் சுரேஷ் தலைமை வகித்தார், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லதுரை, திமுக நகர செயலாளர் எஸ்.அப்பாஸ்,மாவட்ட பஞ்சாயத்து தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர்ரகுமான், சுப்பம்மாள், மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி, துணை சேர்மன் ஐவேந்திரன் தினேஷ் முன்னிலைவகித்தார்கள். கலை இலக்கிய அணி முத்துக்குமார் வரவேற்றார், கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார்.

இதில் தகுதி வாய்ந்த குடும்ப தலைவிக்கு செப்டம்பர் 15ல் அண்ணா பிறந்த நாளன்று ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், 100 நாள் வேலைத்திட்டத்தை 150 நாள் உயர்த்த நடவடிக்கைஎடுக்கப்படும், சம்பளமும் கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், வரும் மக்களவைத் தேர்தலில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அடையாளம் காட்டும் தலைவர் தான் பிரதமராக வேண்டும் என சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள் பூரண சந்திரன், திருமலை கனி, சண்முக சுந்தரி, பண்டார சாமி, துரைக்கனி, ஒன்றிய கவுன்சிலர்கள் திரிகூடபுரம் அருணாசல பாண்டியன், சங்கிலிபட்டி மணிகண்டன், பகவதியப்பன், ஊராட்சி மன்றதலைவர் வேலுத்தாய், துணைத் தலைவர் சுரேஷ் பாண்டியன், அரசு வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி, தகவல் தொழில்நுட்ப அணி சங்கர், ஜெயசீலன், கிளைச் செயலாளர் முத்துராஜ், சிவா, பிள்ளையார் பாண்டியன், சுப்பிரமணியன், சேகர், முருகேசன், ரத்தினம், மீரான், மணி, கணேசன், தங்கப்பாண்டியன், தோப்பையா, முத்துக்குமார், குத்தால குமார், சுரேஷ், சங்கரலிங்கம், கடல் செல்லப்பா,கார்த்திகேயன், சபரி ராஜ், சேக், குமார், ராஜையா, அழகுதுரை, செந்தூர்பாண்டியன், முத்தையா, மகேஷ், முருகேசன், அரசகுமார், கணேசன்,முத்துராமலிங்கம், செல்வராஜ், மயில்சாமி, செல்வகுமார், அருள்செல்வன், ஜெயக்குமார்,ஆறுமுகசாமி, கருப்பசாமி,இசக்கி,அப்துல் வஹாப், பத்மநாபன், ராமர், ஜார்ஜ் குட்டி, ராஜேஸ்வரி,வேல்முருகன், மூக்கையா, துரைராஜ், அண்ணாத்துரை, தருமர், கனி, மற்றும் திரிகைராஜ் கலந்து கொண்டனர்.

மேலும் ஒன்றிய கவுன்சிலர் அருணாசல பாண்டியன் வருவாய் மற்றும் பேரிடர் துறை அமைச்சரிடம் சொக்கம்பட்டி திரிகூடபுரத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயத்தில் சிவராத்திரி, அமாவாசை, மற்றும் விசேஷ நாட்களில் லட்சக்கணக்கில் ஒன்று திரளும் பெரியசாமி அய்யனார் திருக்கோவிலுக்கு செல்லும் சாலை இருபுறமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு சாலைகளில் நான்கு சக்கர வாகனமும், விவசாயத்திற்கு செல்லும் வாகனமும் ஓட்ட ஓட்டுனர்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர். ஆகையால் விவசாயிகளும் கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் நலன் கருதி ஆக்கிரமுப்புக்களை மீட்டு தர வேண்டி அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரனிடம் மனு அளித்தனர், ஐவேந்திரன் தினேஷ் நன்றியுரை கூறி நிறைவு செய்தார்.

# செங்கல் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் கூலித் தொழிலாளி மார்பு வலியால் அவதிப்பட்டு ஆஸ்பத்திரிக்கு சென்றவர் மரணம்

திருவள்ளூர், மே, 10 -

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், திருக்கண்டலம் ஊராட்சியில் உள்ள மேட்டுப்பாளையம் கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான ராசி செங்கல் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது. இங்கு திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுகா, சேத்துப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன் (வயது42) என்பவர் குடும்பத்துடன் தங்கி இருந்து பணியாற்றி வந்தார்.

சாப்பிட்டு விட்டு அனைவரும் உறங்கினர். நேற்று விடியற்காலை எழுந்த வெங்கடேசன் தனக்கு மார்பு வலிக்கிறது என கூறி அலறி துடித்தார். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு உடனடியாக திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்து விட்டதாக கூறினர்.

இந்த சம்பவம் குறித்து நேற்று மதியம் அவரது மனைவி பேச்சியம்மாள் பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# மயிலாடுதுறை மாவட்ட அதிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் தலைமையில் நடைபெற்றது

மயிலாடுதுறை, மே, 10 –

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவிலில் உள்ள அஇஅதிமுக மாவட்ட அலுவலகத்தில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளரும், பூம்புகார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பவுன்ராஜ் தலைமையில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



மாவட்ட அவைத் தலைவரும், சீர்காழி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.வி. பாரதி முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் புதிய உறுப்பினர் படிவம், இளைஞர் மற்றும் இளம் பெண் பாசறை படிவம், மகளிர் அணி படிவம், உறுப்பினர் சேர்த்தல் சம்பந்தமாகவும், வருகின்ற மே 12 அன்று பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்குவதைப் பற்றியும் முக்கிய தீர்மானங்கள் முடிவெடுக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிற அணி செயலாளர்கள், பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பிளஸ் 2 தேர்வில் 600க்கு 600சாதனை மாணவி நந்தினியின் உயர்கல்வி செலவை அரசே ஏற்கும்

## ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை, மே.10–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று (9 ந் தேதி) முகாம் அலுவலகத்தில், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற திண்டுக்கல் அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ச.நந்தினியை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டது. இத்தேர்வில் மாநிலம் முழுவதும் 94.03 சதவிகிதம் மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் 96.38 சதவிகிதமும், மாணவர்கள் 91.45 சதவிகிதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதில் திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரெண்டாம்வகுப்பு பயிலும் வணிகவியல் மாணவி ச.நந்தினி அனைத்துபாடங்களிலும் முழு மதிப்பெண்ணான 600–க்கு 600 மதிப்பெண் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவி ச. நந்தினி, முதலமைச்சரை தன் பெற்றோர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியையுடன் இன்றைய தினம் முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது முதலமைச்சர், அம்மாணவியிடம் உயர்கல்வி பயில்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக்கல்வித் துறை ஆணையர் க. நந்தகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

யாராலும் திருட முடியாத சொத்து கல்வி இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

"கல்வி தான் யாராலும்திருட முடியாத சொத்து" என்று பல நிகழ்ச்சிகளிலும் நான் கூறி வருகிறேன். நேற்று முன் தினம் வெளியான +2 பொதுத்தேர்வு முடிவில் 600/600 மதிப்பெண்கள் பெற்றுச் சாதனை படைத்துள்ள மாணவி நந்தினியும் "படிப்பு தான் சொத்து என்று நினைத்துப் படித்தேன்" எனப் பேட்டியில் கூறியதைக் கண்டு பெருமையடைந்தேன். அவரை நேரிலும் அழைத்து வாழ்த்தினேன். அவரது உயர்கல்விக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நமது அரசே செய்து தரும் என்ற உறுதியையும் வழங்கியுள்ளேன்.

எளிய குடும்பப் பின்னணி கொண்ட நந்தினி போன்றோர் தங்கள் உழைப்பால் அடையும்உயரங்கள்தான் நம் தமிழ்நாட்டின் அடையாளம்."

இவ்வாறு முதலமைச்சர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் இடங்களில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு

திருவொற்றியூர், மே, 10–

சென்னை புழல், எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ள இடங்களை இந்து சமய அறநிலைய துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆய்வு மேற்கொண்டார்



சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 2023 - 24 ஆம் ஆண்டு நிதியாண்டில் அறிவித்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் புழலில் உள்ள கால்பந்து விளையாட்டு மைதானத்தை ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பது, புழல் மகாலட்சுமி நகரில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி பள்ளி வளாகம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைப்பது, மற்றும் திருவொற்றியூர் எண்ணூரில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக்கூடம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படுவது, அதேபோல் திருவொற்றியூரில் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் வடசென்னை மக்களுக்கு பயன்படும் வகையில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை மேம்படுத்த உள்ளது. இந்த இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டு இந்தப் பணிகளை விரைவில் தொடங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்எல்ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் செயலர் அன்சூர் மிஸ்ரா, சென்னை மாவட்ட ஆட்சியர் அமிர்தஜோதி, சென்னை திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் அருள்தாசன் உள்பட அதிகாரிகள் இருந்தனர்



▶ திருவள்ளுவர் உலக சாதனையாளர்கள் அமைப்பு மற்றும் அருந்தமிழ் அரியணை உலக தமிழாய்வு மையம், யோகி பதிப்பகம் சார்பில் புதுச்சேரி தமிழ்ச் சங்கத்தில் நடந்த தமிழ் எழுச்சி மாநாட்டில் சமூக ஆர்வலர் கவிஞர் அ.கனகவள்ளிக்கு அவரது தமிழ் பணியை பாராட்டி தமிழ் சுடர் விருதும், பதக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் தமிழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

திருவள்ளூர், மே, 10 –

திருவள்ளூர் மத்திய மாவட்டம், எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் தமிழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கும் பொதுக்கூட்டம் கன்னிகாபுரம் ஊராட்சி, வாணியன்சத்திரம் கிராமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக செயலாளர் கோடுவெளி தங்கம் முரளி தலைமை தாங்கினார்.



இதில்மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை கழகப் பேச்சாளர் செங்குன்றம் ஏ.திராவிடமணி ஆகியோர் கலந்துகொண்டு தமிழக அரசு பொறுப்பேற்று இரண்டு ஆண்டு காலத்தில் தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டங்களையும், சொல்லாத திட்டங்களையும் செய்துள்ளதை எடுத்துக் கூறினர். இதன் பின்னர் கட்சி கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் வி.ஜே. சீனிவாசன், முன்னாள் பொறுப்புக் குழு உறுப்பினர் எம்.குமார், ஒன்றிய அவைத்தலைவர் பி.ஜி.முனுசாமி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் இ.சுப்பிரமணி, வெங்கல் வி.நாகலிங்கம், எஸ். உமாசீனிவாசன், ஒன்றிய பொருளாளர் ஆர். லோகநாதன், மாவட்ட பிரதிநிதிகள் ஜி.பாஸ்கரன், டி.பாஸ்கர், கே.ஜி. அன்பு, இலக்கிய அணி அமைப்பாளர் வி.ஸ்ரீதர், எம்.நாராயணசாமி, ஏ.சுப்பிரமணி, எஸ். ஆளவந்தான் வழக்கறிஞர் சு.ரகு, ஆயிலச்சேரி எஸ். ரகு, கோடுவெளி கே.டி.எம். வேலன், வெங்கல் வி.பிரீதர், வெங்கல் எம்.ரஜினி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்களுக்கு

# துணைத் தேர்வு நாளை முதல் விண்ணப்பிக்கலாம் என அறிவிப்பு

சென்னை, மே, 10 –

பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்கள், வருகைப்புரியாத தேர்வர்கள், தனித்தேர்வர்களுக்கான துணைத் தேர்வுகளுக்கு மே 11ம் தேதி நாளை முதல் 17 வரை விண்ணப்பிக்கலாம்.

தமிழகத்தில், கடந்த மார்ச் மாதம் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் நடைபெற்று முடிந்தது. 8.17 லட்சம் மாணவ, மாணவியர்கள் எழுதிய இந்த தேர்வுமுடிவுகள் 8ம்தேதிகாலை, பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அண்ணா நூலகத்தில் வெளியிட்டிருந்தார். இந்த நிலையில் பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்கள், துணைத் தேர்வுகளுக்கு நாளை மே 11ம் தேதி முதல் 17 வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்கள், வருகைப்புரியாத தேர்வர்கள், தனித்தேர்வர்களுக்கான துணைத் தேர்வுகளுக்கு மே 11ம் தேதி முதல் 17 வரை விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு http://dge.tn.gov.in என்ற இணையதளத்தை அணுகலாம். என அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

# சென்னை திருவொற்றியூரில் பிஎஃப்ஐ நிர்வாகி வீட்டில் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை. 30 க்கும் மேற்பட்ட போலீசார் குவிப்பு

சென்னை, மே, 10 –

சென்னை திருவொற்றியூரில் தாங்கல் புதிய காலனி பகுதியில் அப்துல் ரசாக் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவரது வீட்டில் நேற்று தேசிய புலனாய்வு அதிகாரிகள் ஆறு பேர் கொண்ட குழுவினர் சோதனையில் ஈடுபட்டனர்.

இவர் தடைசெய்யப்பட்ட அமைப்பான பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் வட சென்னை மாவட்ட செயலாளராக இருந்தவர் ஆவார். அப்துல் ரசாக் ஏற்கனவே புது வண்ணாரப்பேட்டை செரியன் நகர் பகுதியில் வசித்து வந்தவர். புரசைவாக்கம் மூக்காத்தாள் தெருவில் இருந்த பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியாவின் தமிழ்நாடு தலைமை அலுவலகத்தை நிர்வகித்து வந்துள்ளார். பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பாளராகவும், தலைமை நிலைய செயலாளராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

கடந்த 1 வருடத்திற்கு முன்பு தாங்கல் பகுதியில் வாடகை வீட்டிற்கு குடியேறி வந்துள்ளார் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. அப்துல் ரசாக் பழைய வண்ணாரப்பேட்டையில் மென்ஸ் வியர் எனும் ஆண்கள் ஆடையகத்தில் பணியாற்றி வருகிறார்.

இவர் வீட்டில் சுமார் 5 மணி நேரம் சோதனை நிறைவு பெற்று அப்துல் ரசாக்கை இருசக்கர வாகனத்தில் அதிகாரிகள் அழைத்து சென்றனர். இதனால் திருவொற்றியூர் தாங்கல் மார்க்கெட் பகுதியில் ஏராளமான போலீஸ் குவிக்கப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# லாரி மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் தனியார் நிறுவன ஊழியர் பலி

காஞ்சீபுரம் , மே, 10 –

காஞ்சீபுரம் மாவட்டம் வாலாஜாபாத் தாலுகா ஐயன்பேட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் தணிகாசலம். இவரது மகன் பாபு (38). தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்த பாபு ஏகனாம்பேட்டை கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.



இந்த நிலையில் ஐயன்பேட்டை கிராமத்தில் தனியாக வசித்து வரும் தனது தந்தை தணிகாசலத்தை பார்த்துவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏகனாம்பேட்டைக்கு திரும்பிக் கொண்டிருந்தார். காஞ்சீபுரம்-வாலாஜாபாத் சாலையில் பாபு வந்து கொண்டிருந்தபோது ஐயன்பேட்டை கால்நடை மருத்துவமனை அருகே முன்னாள் சென்று கொண்டிருந்த கனரக லாரி திடீரென பிரேக் போட்டதால் பின்னால் போன பாபு எதிர்பாராத விதமாக லாரி மீது மோதினார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த அவரை அந்த வழியாக வந்தவர்கள் மீட்டு உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சீபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த வாலாஜாபாத் போலீசார் பாபுவின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தந்தையை பார்த்துவிட்டு சென்ற மகன் விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### கந்தர்வகோட்டை ஒன்றியத்தில்

# புதிய பாரத எழுத்தறிவு திட்ட தன்னார்வலர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா



கந்தர்வகோட்டை மே 10

புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வழக்காட்டுதலின் படி புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் புதிய பாரத எழுத்தறிவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய பாரத திட்டத்தில் பணிபுரிந்த தன்னார்வலர்களின் கற்பித்தலை ஊக்குவிக்கும் வகையில் பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா வட்டார வள மையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு வட்டாரக் கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி தலைமை வகித்தார். வட்டார வள மைய மேற்பார்வையாளர் பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக இந்நிகழ்வில் கலந்து கொண்ட வட்டாரக் கல்வி அலுவலர் நரசிம்மன் சான்றிதழ் வழங்கி பாராட்டி பேசியதாவது புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தில் 15 வயது முதல் 55 வயது வரை உள்ள எழுதப் படிக்க தெரியாதவர்களுக்கு படிக்க கற்றுக்கொடுக்கும் சிறப்பு திட்டம் ஆகும்.

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் 45 மையத்தை சிறப்பாக செயல்படுத்திய தன்னார்வலர்களுக்கு பாராட்டு தெரிவித்து கொள்வதோடு இத்திட்டத்தை கிராமப்புற பொதுமக்கள் நன்கு பயன்படுத்தி எழுத படிக்க கற்றுக் கொண்டுள்ளனர் என்று கூறினார். தினசரி செய்தித்தாள்,வங்கி பணம் எடுத்தல், வாழ்வியலும் ஆளுமையும், பேரிடர் மேலாண்மை, சாலை பாதுகாப்பு அஞ்சலகத்தில் பணம் செலுத்தல், எண்கள் அறிவோம் சட்டங்கள் அறிவோம் என்ற தலைப்பில் தகவல் அறியும் உரிமை சட்டம்,இலவச கல்வி சட்டம்,போக்சோ சட்டம் போன்ற சிறப்பான சட்டங்களை கற்றுக் கொண்டனர்.

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்று பேசினார். இந்நிகழ்வில் இல்லம் தேடி கல்வி மைய ஒருங்கிணைப்பாளர் அ.ரகமதுல்லா கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் பயிற்றுநர்கள் சுரேஷ்குமார், ராஜேஸ்வரி, சங்கிலிமுத்து சிறப்பாசிரியர்கள் ரம்யா,பிரியா,ராதா,ராணி, கணக்காளர்கள் ராஜேஸ்வரி, ராஜலட்சுமி ஆகியோர் ஏற்பாடு செய்தனர். போட்டியில் வெற்றி பெற்ற தன்னார்வலர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது, நிறைவாக ஆசிரியர் பாரதிதாசன் நன்றி கூறினார்.

# சென்னை மணலி சிபிசிஎல் எண்ணெய் நிறுவனம் சி.எஸ்.ஆர் நிதியை உள்ளூர் பகுதிகளில் செலவிட வேண்டும்

## திருவொற்றியூர் எம்எல்ஏ கே.பி.சங்கர் கோரிக்கை

**திருவொற்றியூர், மே, 10 –**

மத்திய அரசுக்கு சொந்தமான சென்னை மணலியில் உள்ள சிபிசிஎல் நிறுவனம் தனது சிஎஸ்ஆர் நிதியில் திருவொற்றியூர் தாங்கல் பகுதியில் ரூபாய் 35 லட்சம் செலவில் அங்கன்வாடி கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் முன்னிலையில் நடைபெற்றது. வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினார்.



நிகழ்ச்சியில் பேசிய மண்டல குழுத் தலைவர் தி.மு.தனியரசு திருவொற்றியூர் பகுதியை சுற்றி தான் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. தொழிற்சாலைகளில் ஏதாவது பிரச்சனை என்றால் இப்பகுதி மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். இப்பகுதியில் மீனவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் அதிகம் உள்ளதால் தங்களது சிஎஸ்ஆர் நிதியை இப்பகுதிக்கு அதிகம் செலவிட வேண்டும் என கேட்டு கொண்டார்.

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் பேசுகையில், திருவொற்றியூர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளால் திருவொற்றியூர், மணலி, எண்ணூர், போன்ற பகுதிகள்தான் அதிகமாக பாதிக்கப்படுகிறது. அந்நிறுவனங்கள் தங்களது சிஎஸ்ஆர் நிதியில் இரண்டு சதவீதத்தை செலவு செய்கிறார்கள்.

இப்பகுதியில் அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகள் ஏராளமாக உள்ளன. பள்ளி கட்டிடங்கள் மிக மோசமான நிலைமையில் உள்ளன. இந்த பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து வளர்ச்சிக்கு தாராளமாக சிபிசிஎல் நிறுவனம் உதவ வேண்டும். மீனவர்களுக்கு பல்வேறு உதவிகளை தருவதாக வாக்குறுதி தந்தார்கள். ஆனால் இதுவரை செய்யவில்லை, செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம் என கேட்டு கொண்டார்.

வடசென்னை எம்பி கலாநிதி வீராசாமி பேசியதாவது, சிபிசிஎல் நிறுவனம் தனது சிஎஸ்ஆர் நிதியில் பல்வேறு உதவிகளை செய்து வருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் கூறியது போல் மேலும் பல உதவிகளை அவர்கள் செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன். இந்த கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கிய அதிகாரிகளுக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன் என பேசினார்.

நிகழ்ச்சியில் சிபிசிஎல் மேலாளர் புருஷோத்தமன், மண்டல உதவி ஆணையர் வி.நவேந்திரன், செயற்பொறியாளர் ஜாகீர், மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், பகுதி செயலாளர்கள் வை.ம.அருள்தாசன், கார்த்திகேயன், சந்துரு உட்பட பலர் கலந்து கொண்டனர்

# ஏழை, எளிய மக்களின் கடன்களை தள்ளுபடி செய்த அரசு திராவிட மாடல் அரசு

## சுற்றுசூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் பேச்சு

சீர்காழி, மே, 10 –

தமிழகத்தில் ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் முடிவுற்றதை முன்னிட்டு திமுக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.



இதில் கலந்துகொண்டு பேசிய தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன், தமிழக மக்களின் நலனுக்காக பாடுபடக்கூடிய ஒரு அரசு திராவிட மாடல் அரசு தான். தமிழக விவசாயிகளின் நலனுக்காக இலவச மின்சார திட்டத்தை 1989 ஆம் ஆண்டு அன்றைய முதல்வராக இருந்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞரால் கொண்டு வரப்பட்ட திட்டம் தான் இலவச மின்சாரத் திட்டம். விவசாயிகள் அனைவரும் பாரபட்சம் இல்லாமல் பயன்படுவதற்காக இந்த திட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் தற்பொழுது இந்திய அளவில் பசுமை புரட்சி திட்டத்தில், உணவு தானியம் உற்பத்தியில் தமிழ்நாடு தான் முதலிடத்தில் உள்ளது.

தற்போது ஆட்சி பொறுப்பேற்று இரண்டு ஆண்டு காலத்தில் இலவசமாக ஒன்றரை லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியது திராவிட மாடல் அரசு. மேலும் தமிழக மக்களின் அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்து ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி சாதனை படைத்து வருகிறது.

ஆனால் தற்பொழுது அதானிக்கும், அம்பானிக்கும் மட்டுமே கடன்களை தள்ளுபடி செய்து ஏழை, எளிய மக்களை வஞ்சித்து வருகிறது ஒன்றிய அரசு. இதற்காக வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று அமைச்சர் மெய்யநாதன் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கூட்டத்தில் சீர்காழி திமுக சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், ஒன்றிய சேர்மன் கமலஜோதி தேவேந்திரன், உள்ளிட்ட திரளான திமுகவினர் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

# இலவச சிலம்பம் மற்றும் குத்துச்சண்டை பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் ரகுபதி சான்றிதழ் வழங்கி பாராட்டினார்



புதுக்கோட்டை, மே. 10-

நேரு யுவ கேந்திரா புதுக்கோட்டை மாவட்ட குழந்தைகள் நலக்குழுமம், அலுவலர் மன்றம் மற்றும் புத்தாஸ் வீர கலைகள் கழகம், ஆகியவை இணைந்துநடத்திய இலவச சிலம்பம் மற்றும் குத்துச்சண்டை பயிற்சி முகாம் கடந்த 30.4.2023 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டு 08.5.2023 தேதி வரை நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாமானது புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த,காவிரி நகர், திருக்கோகரணம், திலகர் திடல், பழைய பேருந்து நிலையம், பெருங்குடி, கடியாபட்டி, தாஞ்சூர் ஆகிய ஏழு இடங்களில், 400க்கும் மேற்பட்ட மாணவ,மாணவியர்கள், பயிற்சி பெற்றனர். இந்த பயிற்சி முகாமில் நிறைவு விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் விழாவில் நேரு யுவ கேந்திராவின் உதவி திட்ட அலுவலர் நமச்சிவாயம், தலைமை வகிக்க, மாவட்ட குத்துச்சண்டை கழகத்தின் தலைவர் எஸ்.வி.எஸ். ஜெயக்குமார், முன்னிலை வைகித்தார்

விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அமைச்சர் ரகுபதி, பேசுகையில்:- தமிழக அரசு விளையாட்டுக்காக பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. அதில் மிக முக்கியமாக சிலம்பத்திற்கு முதல்வர் முக்கியத்துவம் கொடுத்து மூன்று சதவீத இட ஒதுக்கீடு கொடுத்துள்ளார். எனவே, அனைவரும் இந்த அரசு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய விளையாட்டு துறையில் கவனம் செலுத்தி மென்மேலும் வளர வேண்டும் என மாணவச் செல்வங்களை வாழ்த்தி சான்றிதழ் வழங்கினார், உடன் புதுக்கோட்டை நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் ,நகர்மன்ற துணைத் தலைவர் லியாகத் அலி சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத்தின் தலைவர் மாருதி.கண.மோகன்ராஜ் ,அலுவலர்கள் மன்ற செயல் தலைவர்,மருத்துவர் ராமசாமி ,திரைப்பட இயக்குனர் ஜெயகாந்தன்,மாவட்ட குழந்தைகள் நலக்குழும உறுப்பினர் சுவாமிநாதன், ராசாப்பட்டி சமூக ஆர்வலர் வீரையா இருந்தனர்.செயலாளர் முனைவர் ரமேஷ்,அரிமளம் சமூக ஆர்வலர் ராமமூர்த்தி வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் முன்னதாக புத்தாஸ் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளையின் தலைவர் சேது. கார்த்திகேயன் வரவேற்புரையாற்றினார். பொருளாளர்,ஹரி கிருஷ்ணன் நன்றி கூறினார்.

## கர்நாடகத்தில் தெருவிளக்குகளை அணைத்துவிட்டு

# வாக்காளர்களுக்கு பணம் விநியோகம்

### பாஜக நிர்வாகிகளை கையும் களவுமாக பிடித்த தேர்தல் அதிகாரி

பெங்களூரு, மே. 10-

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள கர்நாடகத்தில் தெரு விளக்குகளை அணைத்துவிட்டு வாக்காளர்களுக்கு பாஜக பணம் விநியோகம் செய்துள்ளது. வாக்காளர்களுக்கு நள்ளிரவில் பணம் விநியோகித்த பாஜக நிர்வாகிகளை தேர்தல் அதிகாரி கையும் களவுமாக பிடித்தார். குல்பர்கா சட்டப்பேரவை தொகுதியில் உள்ள சங்மேஷ் காலனியில் பாஜக நிர்வாகிகள் பணம் விநியோகித்த போது சிக்கினர். பணம் விநியோகித்த பாஜக நிர்வாகிகளை பிடித்த தேர்தல் அதிகாரி யஸ்வந்த் குருக்கர் வீடியோ ஆதாரத்தையும் வெளியிட்டுள்ளார்.

போலீசுக்கு கூட தகவல் தெரிவிக்காமல் தனி ஆளாக சென்று பாஜகவினரை மாவட்ட ஆட்சியரே கையும் களவுமாக பிடித்துள்ளார். பாஜக வேட்பாளர் படத்துடன் கூடிய நோட்டீஸ் மற்றும் பணம் விநியோகிக்கப் பட்டுள்ளது. அதிகாரி வருவதை அறிந்து தப்பிச் செல்ல முயன்ற பாஜக நிர்வாகிகளை விரட்டி பிடித்த ஆட்சியருக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

பணம் விநியோகித்த பாஜக முக்கிய நிர்வாகி பணப்பையுடன் தப்பிவிட்ட போதிலும் கார்ஓட்டுநர்உட்பட 2பேர் கைது செய்யப்பட்டனர். பணப்பையுடன் தப்பிய நபரை வீடியோ பதிவுகளை கொண்டு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் தகவல் தெரிவித்துள்ளார். தன்னை கண்டதும் பணம் விநியோகித்த கார், விபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வேகமாக தப்பியதாக ஆட்சியர் கூறியுள்ளார்.

தெரு விளக்குகளை அணைத்துவிட்டு பணம் தந்தது குல்பர்கா தெற்கு தொகுதி பாஜக எம்எல்ஏ தத்தாரேய பாட்டீல் ரேவூர் என காங்கிரஸ் புகார் கூறியுள்ளது. மீண்டும் அதே தொகுதியில் போட்டியிடும் பாஜக எம்எல்ஏ பணம்கொடுத்து வாக்குகளை பெற முயன்றதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

## அரியலூரில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும்

# நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்ந்த பொது மக்கள் குறைதீர் கூட்டம் மே.15-ல் நடைபெற உள்ளது



அரியலூர், மே. 10-

அரியலூர் மாவட்டத்தில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைசம்மந்தமான பொது மக்கள் குறைதீர் கூட்டம், 13.05.2023 காலை 10.00 மணிமுதல் மதியம் 01.00 மணி வரை நடைபெற உள்ளது.

மேற்கண்ட கூட்டத்தினை, சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர்கள் முன்னின்றுநடத்துவார்கள். அக்கூட்டத்தில், கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொள்வார்கள். மேலும், அக்கூட்டம் நடத்தப்படுவதை மேற்பார்வை செய்திட அரியலூர் வட்டம், இலந்தைக்கூடம் கிராமத்திற்கு துணை பதிவாளர் (பொ.வி.தி) அரியலூர், உடையார்பாளையம் வட்டம்,அங்கராயன்நல்லூர் (கிழக்கு) கிராமத்திற்கு மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அரியலூர், செந்துறை வட்டம், கிளிமங்களம் கிராமத்திற்கு தனித்துணை ஆட்சியர், சமூகபாதுகாப்புத்திட்டம் அரியலூர், ஆண்டிமடம் வட்டம், காட்டாத்தூர் (வடக்கு) கிராமத்திற்கு மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் அரியலூர், ஆகியோர் மேற்பார்வை அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, அக்கூட்டத்தில், பொதுமக்கள் நியாய விலைக் கடைகள் தொடர்பான குறைகளைத் தெரிவித்தும், மின்னணு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம், செல்போன் எண் பதிவு மாற்றம் செய்தல், புதிய ரேசன் கார்டு, நகல் மின்னணு குடும்ப அட்டை, மாற்றுத்திறனாளிகள், வயதானவர்கள் ஆகியோர்களுக்கு அங்கீகாரச் சான்று வழங்குதல், குடும்பத் தலைவர் இறந்திருந்தால் அவரது புகைப்படத்தை மாற்றம் செய்வதற்கு, புதிய குடும்பத் தலைவரின் புகைப்படத்துடன் விண்ணப்பம் செய்தல் மற்றும் தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்த புகார்களை அளித்து நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் படி பயன்பெறலாம் என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி தெரிவித்துள்ளார்

## தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சியில்

# பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை அமைச்சர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்



தென்காசி, மே.10-

தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.ரவிச்சந்திரன் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் துறை அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.


சேர்வைக்காரன் ஊராட்சியில் 15-வது மத்திய நிதி குழு மானிய திட்டம் 2022- 2023 திட்டத்தின் கீழ் ரூ 13.48 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் தொட்டிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலம் 2022 -2023 திட்டத்தின் கீழ்ரூ 4.40 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் காங்கிரட் சாலை பணியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். வெயிகாலிபட்டி, பெரும்பத்து ஆகிய ஊராட்சியிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2021 -2022 ல் ரூ 12.61 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடத்தையும் திறந்து வைத்தார்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகளையும் வழங்கினார், இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ, கடையம் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் செல்லம்மாள், ஒன்றிய குழு உறுப்பினர் ரம்யா, செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் இரா. இளவரசி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமலை குமார், ராஜசேகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# தென்காசி ரயில் படிக்கட்டில் பயணம் செய்த இளைஞர் பலி

தென்காசி, மே. 10-

திருநெல்வேலி - தாம்பரம் ரயிலின் படிக்கட்டில் பயணம் செய்த இளைஞர் சிக்னல் கம்பத்தில் மோதி பலியானார். அவர் யார் எந்த ஊரைச் சார்ந்தவர் என்பது பற்றி தென்காசி ரயில்வே போலீஸார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.



திருநெல்வேலி - தாம்பரம் ரயில் திருநெல்வேலியில் இருந்து புறப்பட்டு பாவூர்சத்திரம் ரயில் நிலையத்தை தாண்டி தென்காசி நோக்கி வந்து கொண்டிருந்த போது அந்த ரயிலில் பயணம் செய்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் படிக்கட்டில் நின்று கொண்டு பயணம் செய்திருக்கிறார். அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் பகுதியில் இருந்த சிக்னல் கம்பத்தில் மோதி கீழே விழுந்ததில் பலத்த காயமடைந்து இரத்தவெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இது பற்றி குலசேகரப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் ச.ரமேஷ் கொடுத்த புகாரின் அடிப்படையில் தென்காசி இருப்புப் பாதை காவல் நிலைய உதவி ஆய்வாளர் எஸ். மாரியப்பன், தலைமை காவலர் எஸ். நாகராஜ். மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ரயிலில் படிக்கட்டில் நின்று பயணம் செய்து பலியான இளைஞரின் உடலை மீட்டு பிரேதபரிசோதனைக்காக தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இது தொடர்பாக தென்காசி ரயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விபத்தில் பலியான இளைஞர் யார் எந்த ஊரைச் சார்ந்தவர் எந்த நிலையில் இந்த விபத்து நடைபெற்றது என்பது பற்றியும் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்தச் சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் கீரனூர் அரசு பள்ளி சாதனை

கீரனூர், மே. 10-

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 92% தேர்ச்சி பெற்றனர்.

இந்த ஆண்டு மொத்தம் 98 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 90 மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

தினேஷ் கார்த்திக் 525 மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலிடத்தை பெற்றார். கணினி பயன்பாட்டியல் பாடத்தில் இம்மாணவர் நூற்றுக்கு நூறு பெற்றுள்ளார். ஜாபர் அலி 505 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம். ராஜா 492 பெற்றார். பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ஒய்யப்பன் பள்ளி மேலாண்மைக்குழு தலைவி பானுமதி சிதம்பரம் ஆகியோர் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டினர்.

மாவட்ட அளவில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் அதிகமான தேர்ச்சி விழுக்காட்டை பெற்று இரண்டாவது இடம் பெற்றுள்ளது. மேலும் மாநில அளவில் ஆண்கள் பள்ளிகளின் சராசரி தேர்ச்சி விழுக்காட்டை காட்டிலும் ஐந்து விழுக்காடு கூடுதலாக பெற்றுள்ளது பெருமையாகஇருப்பதாக தலைமையாசிரியர் முருகன் தெரிவித்தார். இச்செய்தி அறிந்த அப்பகுதி பொதுமக்கள் அப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆசிரியர்களை வெகுவாக பாராட்டி வருகின்றனர். மேலும் கடந்த ஆண்டு இப்பள்ளியிலிருந்து இரண்டு மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்கு தேர்வாகி படித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புதுகை வரலாறு நாளிதழ் நடத்திய கல்வி கண்காட்சியில் இப்பள்ளியின் மாணவன் ராமகிருஷ்ணன் குலுக்கல் முறையில் லேப்டாப் பெற்றுள்ளார் என்பது கூடுதல் செய்தி.

### புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி சாதனை

+2 பொதுத்தேர்வில், புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் இந்த ஆண்டு 96%தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதில் வேதியியல், விலங்கியல், தரவரவியல், உயிரியல், கணினி அறிவியல், கணினிப் பயன்பாடு, பொருளியல், வணிகவியல், கணினி தொழில் நுட்பம், வேளாண் அறிவியல் ஆகிய 10 பாடங்களில் மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், சிறந்த தேர்ச்சியினை பெற்றுத்தந்த ஆசிரியர்களுக்கும், உறுதுணையாக இருந்த அலுவலகப்பணியாளர்களுக்கும் பள்ளி முதல்வர் சிவப்பிரகாசம் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

# தமிழகத்தில் பிஎப்ஐ முன்னாள் நிர்வாகிகள் 5 பேர் கைது நடவடிக்கை



சென்னை, மே. 10-

தமிழகத்தில் பிஎப்ஐ முன்னாள் நிர்வாகிகள் 5 பேரை என்.ஐ.ஏ கைது செய்தது.

தமிழ்நாட்டில் நேற்று பல்வேறு இடங்களில் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) அதிகாரிகள் சோதனை செய்த நிலையில், 5 பேரை கைது செய்துள்ளது. இதில், சென்னையை சேர்ந்த அப்துல் ரசாக், மதுரையை சேர்ந்த வழக்கறிஞர் முகமது யூசப், முகமது அப்பாஸ், திண்டுக்கலை சேர்ந்த முகமது கைசர் மற்றும் தேனியை சேர்ந்த சாதிக் அலி ஆகியோரை கைது செய்தது தேசிய புலனாய்வு முகமை.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா தொடர்புடைய இடங்களில்என்ஐஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதன்படி, சென்னை, தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட உங்களில் நேற்று சோதனையில் ஈடுபட்டனர். பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்புக்கு தொடர்புடைய 6 இடங்களில் என்.ஐ.ஏ நடத்திய சோதனையில், கூர் ஆயுதங்கள், டிஜிட்டல் ஆவணங்கள், சட்டவிரோத ஆவணங்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே, இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 10 பேருக்கு எதிராக என்.ஐ.ஏ குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், தற்போது மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தடை செய்யப்பட்ட பாப்புலர் ப்ரண்ட் ஆப் இந்தியா இயக்கத்துடன் தொடர்ந்து செயல்பட்டு வருவதாக புகார் எழுந்தது அடுத்து, தேசிய புலனாய்வு முகமை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதுவரை பிஎப்ஐ குற்றவியல் சதி வழக்கில் கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதாக என்.ஐ.ஏ தெரிவித்துள்ளது.






# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது இஸ்லாமாபாத் நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு

இஸ்லமாபாத் மே. 10-

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கைது செய்யப்பட்டார். இஸ்லமாபாத் நீதிமன்ற வளாகத்தில் வைத்து அவரை போலீஸார் நேற்று கைது செய்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பெரும் பரபரப்பு நிலவியது. கருப்பு நிற ஜீப்பில் அதிரடிப் படை போலீஸாரால் இம்ரான் கான் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில், "இம்ரான் கான் இஸ்லமாபாத் நீதிமன்றத்தில் தனது ஜாமீனை புதுப்பிக்க வந்தார். அப்போது அவரது காரை சூழ்ந்த போலீஸார் அவரை கைது செய்தனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்ரான் கான் மீது பாகிஸ்தானில் 100-க்கும் அதிகமான வழக்குகள் உள்ளன. இதில் 'காதிர் ட்ரஸ்ட்' வழக்கில் அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் காவல்துறை தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

இம்ரான் கான் கைது குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அசார் மாஷ்வானி இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் இம்ரான் கானின் கைதை எதிர்த்து அவரது கட்சியான தெஹ்ரீக்-இ-இன்சாப் நாடு முழுவதும் போராட்டம் நடக்கும் என்று அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாகவே இம்ரான் கான் பாகிஸ்தானின் ராணுவத்தை கடுமையாக விமர்சித்து வந்தார். தன்னை மேஜர் பைசல் கொலை செய்ய நினைத்தார் என்று அவர் கூறினார். ஆனால் எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் இம்ரான் கான் குற்றம் சுமத்துகிறார் என்று பாகிஸ்தான் ராணுவமும் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இம்ரான் கான் கைதை தொடர்ந்து இஸ்லமாபாத்தில் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கான் (70) கடந்த ஆண்டு ஏப்ரலில் பதவி விலகினார். அவரது தலைமையிலான கூட்டணியில் இருந்து, முக்கியக் கட்சி பிரிந்து, எதிர்க்கட்சியுடன் இணைந்ததால், நாடாளுமன்றத்தில் இம்ரான் கான் ஆட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், நம்பிக்கை வாக்கெடுப்பை சந்திக்கும் முன்பே, அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதையடுத்து, ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தது. இந்த நிலையில் ஆளும் கட்சிக்கு எதிராக இம்ரான் தொடர்ந்து பேரணிகளையும், போராட்டங்களையும் நடத்தி வந்தார். கடந்த நவம்பர் மாதம் இம்ரான் கான் மீது துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், இம்ரான் கான் மீது பாகிஸ்தானில் பிரச்சாரத்தின்போது நீதித் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், போலீஸாருக்கும் மிரட்டல் விடுத்த வழக்கு, பாகிஸ்தானின் பிரதமராக இம்ரான் கான் இருந்தபோது வெளிநாட்டுப் பயணத்தில் முக்கியப் பிரமுகரிடமிருந்து பெற்ற பரிசு பொருட்களை அரசு கருவூலத்தில் சேர்க்காமல் தனது சொந்த கணக்கில் சேர்த்த வழக்கு என 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அப்போதே அவர் கைதாவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், இம்ரான் கான் கட்சி ஆதரவாளர்கள் நடத்திய போராட்டத்தால் அவரை கைது செய்ய பாகிஸ்தான் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் இம்ரான் கானுக்கு அனைத்து வழக்குகளிலும் நீதிமன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.




# டெல்டா மாவட்டத்திற்கு பிரதிநிதித்துவம் விரைவில் அமைச்சரவை விரிவாக்கம்

# தமிழகத்தில் பிஎஃப்ஐ நிர்வாகிகள் 5 பேர் கைது என்.ஐ.ஏ நடவடிக்கை






# ஆற்றுக்குள் கவிழ்ந்த பேருந்து 22 பேர் உயிரிழப்பு

சென்னை / புதுக்கோட்டை | 10.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

யுக்தேசுவர் கிரி , இந்திய குரு (பி.1855) (இ.1936)



நயந்தரா சாகல் , இந்திய எழுத்தாளர் (பி.1927)



கார்த்திகேசு சிவத்தம்பி , ஈழத்துத் தமிழறிஞர், எழுத்தாளர், பேராசிரியர் (பி.1932) (இ.2011)



நெல்லை சு. முத்து , தமிழக அறிவியலாளர் (பி.1951)



ஆ. ராசா , தென்னிந்திய அரசியல்வாதி (பி.1963)



## இன்றைய நினைவு நாள்

கோபிகிருஷ்ணன் , தமிழக எழுத்தாளர் (பி.1945) (இ.2003)



தோப்பில் முகமது மீரான் , தமிழக எழுத்தாளர் (பி.1944) (இ.2019)

